**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 111/2021**
**வழக்கு சாட்சி PW– 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.சுதாகர் சோமசுந்தரம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ராமசாமி ராஜரத்தினம் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | திருநெல்வேலி | வயது | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 20th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நுண்கதிர் நோய்க்கான பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.07.2019 அன்று நான் அதே பிரிவில் பணியில் இருந்தபோது, மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்த 32 வயதுடைய சரண்யா என்ற பெண் நோயாளிக்கு மருத்துவர் பரிந்துரையின் பேரில் நுண்கதிர் வீச்சாளரால் நெஞ்சு பகுதி மற்றும் வலது கை பகுதிகளுக்கான நுண்கதிர் படங்கள் எடுக்கப்பட்டன. நான் அந்த படங்களை ஆய்வு செய்து அவருக்கு நெஞ்சு பகுதியில் எலும்பு முறிவு எதுவும் காணப்படவில்லை எனவும், வலது கைப்பகுதியில் சுண்டு விரலில் Proximal Phalanx முதல் சிறு எலும்பு முறிந்து காணப்பட்டது எனவும் கருத்துரை வழங்கினேன். அந்த நுண்கதிர் படத்தின் வரிசை எண்.7003ME.

பின்பு அதே நாளில் மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்த 37 வயதுடைய சுமதி என்பவருக்கு நெஞ்சு பகுதி மற்றும் இடது கை பகுதிக்கான நுண்கதிர் படங்கள் எடுக்கப்பட்டன. அதில் அவருக்கு எலும்பு முறிவு எதுவும் காணப்படவில்லை என கருத்துரை வழங்கினேன். அந்த படங்களின் வரிசை எண்.7004ME. இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

__எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :__

நான் போலீசார் விசாரைணையில் சரண்யாவின் நெஞ்சுபகுதியில் எலும்பு முறிவு ஏற்படவில்லை என சொல்லியுள்ளேனா? என்றால் எனக்கு ஞாபகமில்லை. சுமதி என்பவருக்கும் நெஞ்சுபகுதியில் காயம் ஏற்பட்டதாக நான் சொல்லியுள்ளேனா? என்றால் எனக்கு ஞாபகமில்லை.

__மறுவிசாரணை__ –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.21 18:50:21 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : CC.No. 111/2021</u>**
**<u>வழக்கு சாட்சி PW-10</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோட்டூர்ச்சாமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பரமசிவன் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | புளியங்குடி | வயது | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 20th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை</u>** :

நான் புளியங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் காவல்நிலையத்தில் எதிரியை பார்க்க சென்றிருந்தேன். அப்போது, போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.6** ஆகும். அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.7** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 24.07.2019ம் தேதி, 12.00 மணிக்கு எதிரி முத்து என்பவரை போலீசார் என் முன்பும், இசக்கித்துரை

முன்பும் கைது செய்து விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தனக்கு முதுகுக்கு பின்னால் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து ஆஜர் செய்வதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. பின்னர், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் அரிவாளை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதை போலீசார் கிருஷ்ணாபுரம் ஆஞ்சநேயர் கோவில் பக்கம் வைத்து அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், இசக்கித்துரை என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.21 18:50:29 +0530